International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

தருமபுரி மாவட்ட நரிக்குறவர்களின் வழிபாட்டு முறைகள்

ஆ. சுவாதி
முனைவர்பட்ட ஆய்வாளர்

முனைவர் பொ. செந்தில்குமார்
உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது, பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி - 636905

ஆய்வுச்சுருக்கம்

நரிக்குறவர் மக்களின் தெய்வ வழிபாட்டின் மிக முக்கியத் தத்துவம் இயற்கை மற்றும் முன்னோர்களைக் கடவுளாகக் கருதுதல் ஆகும். இவர்களது வழிபாட்டில் பிரம்மாண்டமான கோபுரங்களோ, சிலைகளோ, நெறிமுறைப்படுத்தப்பட்ட விதிகளோ அல்லது பிராமணப் பூசாரிகளோ இருப்பதில்லை. மாறாக, எளிய திறந்தவெளிப் பீடங்கள், மரத்தடிகள் மற்றும் தங்களின் குலப் புனிதப் பொருட்களின் தொகுப்பான 'மூட்டை' ஆகியவற்றையே தெய்வமாக வணங்குகின்றனர். இவர்களது ஆக்ரோஷமான சாமியாடுதல் முறைகளும், விலங்குகளைப் பலியிடும் 'குருதிப் பலி' சடங்குகளும் இவர்களது ஆன்மீக உலகை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.

தற்கால நவீனமயமாகும் சூழலில், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பிற சமூகங்களுடனான கலப்பு காரணமாக நரிக்குறவர் மக்களின் பாரம்பரிய வழிபாட்டு முறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இருப்பினும், தங்களின் தனித்துவமான இன அடையாளத்தை இழந்துவிடாமல் பாதுகாப்பதில் இவர்களது குலதெய்வ வழிபாடு ஒரு பெரும் அரணாகத் திகழ்கிறது. இதன் அடிப்படையில் தருமபுரி மாவட்டத்தில் வசிக்கும் நரிக்குறவர் சமூக மக்களின் குலதெய்வ வழிப்பாட்டுச் சடங்குகள் மற்றும் திருவிழாக்கள், சமகாலத்தில் ஏற்பட்டுள்ள பண்பாட்டு மாற்றங்கள் மற்றும் அவற்றின் சமூக மானிடவியல் முக்கியத்துவம் ஆகியவற்றை விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்வதே இவ்வாய்வின் முதன்மையான நோக்கமாகும். இச்சமூகத்தின் மறைந்து வரும் வாய்மொழி மரபுகளையும் ஆன்மீக விழுமியங்களையும் ஆவணப்படுத்துவதில் ஒரு முக்கியப் பங்களிப்பை ஆற்றுகிறது.

முதன்மைச் சொற்கள்

வியப்பு, திருமுழுக்கு, அருளாசி, குருதி, உபவாசம், சந்ததி, திருக்காட்சி, படையல், பலி

முன்னுரை

நரிக்குறவ மக்களின் ஆன்மிகச் சிந்தனை; தாய்வழிச் சமூகக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. வேட்டையாடும் ஆயுதங்களிலும் வாழும் கூடாரங்களிலும் தெய்வீக ஆற்றல் இருப்பதாக நம்புகின்றனர். காடுகளில் அலைந்து திரியும் போது தங்களை விலங்குகளிடமிருந்தும், இயற்கைச் சீற்றங்களிலிருந்தும் காப்பது குலதெய்வங்களே என்ற

அசைக்க முடியாத நம்பிக்கை இவர்களிடம் உள்ளது. பிரபஞ்சக் கோட்பாட்டின் படி, சிவனை (தாதாஜி) முதன்மைக் கடவுளாகக் கருதினாலும், உலகை இயக்குவதும் சடங்குகளை ஏற்பதும் பெண் தெய்வங்களே (சக்தி) ஆகும்.

இவ்வாய்வு தருமபுரி மாவட்ட எல்லைக்குட் பட்ட நரிக்குறவர் மக்களின் வழிபாட்டுமுறை களையும், சடங்குச்சாரங்களையும், சமகாலப் பண்பாட்டு மாற்றங்களையும் மட்டுமே தன் ஆய்வுக்கருப்பொருளாகக் கொண்டுள்ளது. ஆன்மீக விழுமியங்கள், குலதெய்வவழிபாடு, பலிச்சடங்குகள் மற்றும் விரத முறைகள் ஆகிய எல்லைக்குட்பட்டு ஆய்வு செறிவுட்டப் பட்டுள்ளது.

தருமபுரி மாவட்ட நரிக்குறவர் குடியிருப்பு களின் ஆன்மிகக் களம்

தருமபுரி மாவட்ட நரிக்குறவர் மக்களின் வாழ்வியலை ஆய்வுச் செய்யும் போது அவர்களின் குடியிருப்புகளே ஆன்மிகக் களமாக விளங்குவதை காணமுடிகிறது. அதியமான் கோட்டை, ஓகேணக்கல், பென்னாகரம், பாலக்கோடு, அரூர், தீர்த்த மலை, காரியமங்கலம் மற்றம் தருமபுரி நகரின் ஒதுக்குப்புறம் போன்ற பல்வேறு பகுதிகளில் பரவலாக நரிக்குறவர் குடியிருப்புகள் அமைந்துள்ளன. இவர்களின் குடியிருப்புகள் பொதுவாக பிரதான கிராமங் கள் அல்லது நகரங்களின் எல்லையோரங்க ளிலேயே அமைந்திருக்கும். காடுகளுக்கு நெருக்கமாகவோ அல்லது திந்தவெளிப் பகுதிகளிலோ தங்களின் ஆன்மிகச் சடங்கு களை நடத்துவதற்கு ஏதுவான இடங்களை அவர்கள் தேர்வு செய்கின்றனர். இவர்களின் குடியிருப்புகளின் நவீன வீடுகள் சில வந்திருந்தாலும், திருவிழாக் காலங்களில் தற்காலிகக் கூடாரங்கள் அமைத்து, ஆதி நாடோடி ஆன்மிகக் களத்தை அப்படியே மறு உருவாக்கம் செய்கின்றனர்.

"கோயிலிலா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியே தமிழகத்தில் வழங்கு கிறது. நல்லது நடந்தால் தெய்வ அருள் என்றும் தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் நம்புகின்றனர். நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை நம்புகின்றனர். நாட்டுப்புறமக்கள் நாட்டுப்புற தெய்வங்களை நம்பிக்கையுடனும் அச்சம் கலந்த உணர்வுடனும் வழிபடுகின்றனர்."[1]

குடியிருப்பின் மையப்புள்ளி சாமித் தம்பு

ஒரு நரிக்குறவர் குடியிருப்பின் மிக உன்னதமான மற்றும் புனிதமான பகுதி என்பது அங்குள்ள மூத்த பூசாரி அல்லது பகவான் வாழும் கூடாரமாகும். இதுவே அந்தக் குடியிருப்பின் ஆன்மிக மையமாகக் செயல்படுகிறது. இந்தக் கூடாரத்திற்குள் தான் ஒட்டுமொத்தக் குலத்தின் அடையாளமான சாமி மூட்டை தொங்கவிடப்பட்டிருக்கும். இந்தக் குறிப்பிட்ட ஆன்மிகக் களத்திற்குள் குடியிருப்பில் உள்ள மற்றவர்கள் கூட குறிப்பிட்ட தூய்மை விதிகளோடு தான் நுழைய வேண்டும். குடியிருப்பில் யாருக்கு என்ன துயரம் நேர்ந்தாலும் அவர்கள் ஓடி வந்து அடைக்கலம் புகும் இடமாக இந்தச் சாமித் தம்பு விளங்குகிறது.

கிராமத் தெய்வங்களுடனான ஆன்மிகப் பிணைப்பு

பல தலைமுறைகளாக வாழ்ந்து வருவதால் இவர்களின் ஆதிப்பழங்குடி ஆன்மிகக் களம் தருமபுரியின் வழிபாட்டு முறைகளோடு ஒரு பரஸ்பரத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இவர்களின் ஆதிப்பெண் தெய்வங்களை தருமபுரி மாவட்ட மக்கள் வழிபடும் மாரியம்மன், காளியம்மன், அங்காளம்மன் போன்ற பெயர்களோடு ஒப்பிட்டு அதே பெயர்களிலேயே அழைக்கத் தொடங்கியுள்ளனர். தருமபுரி கோட்டை மாரியம்மன் திருவிழா அல்லது உள்@ர் ஊர்த் திருவிழாக்களின் போது நரிக்குறவர் மக்கள் தங்களின் குடியிருப்புகளில் இருந்தப் படியே ஆதித் தெய்வங்களுக்குச் சிறப்புப் பூசைகள் செய்து, ஆன்மிகக் களத்தோடு தங்களை இணைத்துக் கொள்கிறார்கள்.

"அதியமான் கோட்டைக்குக் கிழக்கே நெடுஞ் சாலையில் அருகில் 'பைரவர் கோவில்; என வழங்கும் 'சிவன்' கோவில் ஒன்று இருக்கிறது. கோவிலின் அடியில் இருக்கும் கல்வெட்டிலிருந்து இக்கோயிலில் முன்னாள் பெயர் 'பரமேஸ்வர உடையார் கோவில்' என்று தெரிகிறது. இக்கோயில் தெற்கு நோக்கியது. இதனை அடுத்து இதன் முன்னால் உள்ள இன்னொரு கோயில் அங்காளம்மன் கோயில்".[2]

காளி மற்றும் துர்க்கை வழிபாடு

நாடோடிப் பழங்குடிகளாகக் காடுகளையும் வனவிலங்குகளையும் எதிர் கொண்டு வாழ்ந்த இச்சமூக மக்கள், தங்களின் அசைக்க முடியாத பாதுகாப்பு அரணாகக் கருதியது இந்த இரு பெரும் உக்கிரத் தெய்வ வடிவங்களைத்தான். காளியும் துர்க்கையும் வெவ்வேறானவர்கள் அல்ல. அவர்கள் ஒரே ஆதி சக்தியின் இரு வேறு ஆற்றல் வடிவங்கள் ஆவர். காட்டில் பயணிக்கும் போது தங்களுக்கு ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள், எதிரிகள் மற்றம் கொடிய விலங்குகளின் தாக்குதல்களில் இருந்து தங்களைக் காக்கும் பேராற்றலாகக் காளியையும் துர்க்கையையும் பார்க்கிறார்கள். இவர்களின் காளியும் துர்க்கையும் பட்டுப் புடவையோ நகையோ அணிந்தவர்கள் அல்லர். அவர்கள் காட்டில் இயல்பான உக்கிரத்தையும் வீரத்தையும் வேட்டைச் சமூகத்தின் ஆவேசத்தையும் பிரதிபலிக்கும் ஆதி வடிவங்கள் ஆவர்.

இரத்தப் பலியும் உக்கிரத் தனிப்பும்

காளி மற்றும் துர்க்கை வழிபாட்டில் மிக முக்கிய அங்கமே இரத்தப் பலி சடங்கு தான். காளி மற்றும் துர்க்கையின் உக்கிரத்தைத் தணிக்கக் கிடாய் (ஆடு), சேவல்கள் மற்றும் காஜியா பிரிவினர் எருமை மாடு பலியிடப்படுகிறார்கள். இயற்கையின் கொடூரமான பக்கமாகக் கருதப்படும் நோய்க ளையும் பஞ்சத்தையும் தங்களுக்குத் தராமல் தங்களைக் காத்து வரும் அன்னைக்குத் தங்களின் நன்றியைத் தெரிவிக்கும் விதமாகவே இக்குருதி அர்ப்பணிப்பு செய்யப் படுகிறது.

"எருமைமாடு பலிகொடுப்பவர்கள் ஆடு பலி கொடுப்பவர்கள் என இருபெரும் முக்கியப் பிரிவுகள் நரிக்குறவர்களிடையே உள்ளன. ஆடு பலி கொடுக்கும் பிரிவினர் ஒரக்காடு கிராமத்தில் அதிகமாக உள்ளனர். அவர்க ளிடையே குஜராத்தி (ஒரு வேளை குஜராத்தி லிருந்து), மேவாடு (ஒரு வேளை மேவாரி லிருந்து) தாபி, சாலியோ என நான்கு வகைச் சாதிகள் அல்லது பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு குழுவும் அவர்கள் வணங்கும் தேதைகளைக் கொண்டு வேறுப்படுத்தப் படுகிறது. அத்துடன் பல்வேறு வகைப்பட்ட பெயர்களை உடைய சிறு குழுக்களாலான உட்பிரிவுகளும் இவர்களிடையே உள்ளன."[3]

தருமபுரி மாவட்ட உள்ளூர் கிராமத் தெய்வங்களுக்கும் நரிக்குறவர் தெய்வங்களுக்குமான தொடர்பு

இம்மண்ணில் பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் நரிக்குறவர் சமூக மக்கள், நாடோடி வாழ்வியலிருந்து நிலைவாழ்வுக்கு மாறியபோது, அவர்களின் ஆதிப் பழங்குடி ஆன்மிகத்திற்கும் தருமபுரி மாவட்ட உள்ளூர் கிராம தெய்வ வழிபாட்டிற்கும் இடையே ஒரு ஆழமான பரஸ்பரப் பண்பாட்டுத் தொடர்பு உருவானது.

1.பெண் தெய்வ வழிபாடு

தருமபுரி மாவட்ட உள்ளூர் மக்களின் வழிபாடும் சரி, நரிக்குறவர் மக்களின் வழிபாடும் சரி, இரண்டுமே பெண் தெய்வ ஆதிக்கத்தை மையாமாகக் கொண்டவை. தருமபுரி மாவட்ட சுற்றியுள்ள கிராமங்களில் வணங்கப்படும் மாரியம்மன், காளியம்மன், அங்காளம்மன், எல்லையம்மன் போன்ற வடிவங்கள் தீமையை அழித்துக் காக்கும் உக்கிரத் தன்மையைக் கொண்டவை. நரிக்குறவ மக்களின் பூர்வீகக் குலதெய்வங் களும் காளி, துர்க்கை போன்ற உக்கிர வடிவங்களே ஆகும். இரண்டு வழிபாட்டு முறைகளுமே இயற்கையின் உக்கிரத்தையும், தாய்மையின் பேராற்றலையும் போற்றுவதால் நரிக்குறவ மக்கள் தருமபுரி உள்ளூர் தெய்வங்களைத் தங்களின் சொந்தத் தெய்வங்களாக எளிதில் உள்வாங்கிக் கொண்டனர்.

2.சடங்கு முறைகளில் உள்ள ஒற்றுமைகள்

தருமபுரி மாவட்ட சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களின் தெய்வ வழிபாட்டுச் சடங்குகளுக்கும், நரிக்குறவர் சடங்குகளுக் கும் இடையே வழிபாட்டு ரீதியாகப் பல ஒற்றுமைகள் உள்ளன. தருமபுரி மாவட்ட கிராமத் திருவிழாக்களில் மாரியம்மன் அல்லது காளிக்குக் கிடாய் (ஆடு) மற்றும் கோழிகளைப் பலியிடும் வழக்கம் உண்டு. நரிக்குறவர் மக்களிடமும் இரத்தப் பலி என்பது குலதெய்வத்தின் முதன்மைச் சடங்காகும். இந்த இருதரப்புப் பலி மரபும் இவர்களின் ஆன்மிக நெருக்கத்தை வளர்த்தது. உள்ளூர் கிராமக் கோவில்களில் பூசாரிகள் சாமியாடி அருள்வாக்குச் சொல்வது போலவே, நரிக்குறவர் சமூகத்திலும் பூசாரி

சாமியாடிக் குறி சொல்வதன் மூலம் சமூகப் பிரச்சனைகளைத் தீர்க்கும் வழக்கம் உள்ளது. "பழங்குடி சமுதாயத்தில் சமயக்சடங்குகளில் பெரும்பாலும் பெண்கள் குறிப்பிட்டத்தக்க பங்கு எடுத்துக் கொள்வ தில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது."[4]

3. திருவிழாக் காலப் பிணைப்பு

தருமபுரி மாவட்ட உள்ளூர் திருவிழாக்களில் நரிக்குறவர் மக்கள் தங்களின் பங்களிப்பைத் தனித்துவமாக வெளிப்படுத்துகின்றனர். திரு விழாக்களின் போது, நரிக்குறவர் குடியிருப்பு களில் உள்ள மக்களும் விரதமிருந்து, உள்ளூர் கோவில்களுக்குச் சென்று வழி படுகின்றனர்.உள்ளூர் கிராமத் திருவிழாக்கள் தான் நரிக்குறவ மக்களின் பாசிமணி, ஊசி மற்றும் கைவினைப் பொருட்களின் விற்பனைக்கான முதன்மைக் களங்கள். இதனால் திருவிழாக்கள் இவர்களை ஆன்மிக ரீதியாக மட்டுமன்றி சமூக – பொருளாதார ரீதியாகவும் உள்ளூர் மக்களுடன் பிணைக்கின்றன.

4. தனித்துவத்தின் எல்லைக் கோடு

உள்ளூர் கிராமத் தெய்வ வழிபாட்டோடு எவ்வளவு தொடர்புகள் இருந்தாலும், நரிக்குறவ மக்கள் தங்களின் பழங்குடித் தனித்துவத்தை எங்கும் விட்டுக் கொடுப்ப தில்லை. உள்ளூர் மக்கள் மாரியம்மனுக்குக் கோபுரமும் சிலையும் கட்டி வணங்கும் போது நரிக்குறவர்கள் இன்றும் தங்களின் மாரியம்மனைத் தங்களின் நடமாடும் கோவிலான சாமி மூட்டைக்குள் வைத்தே வழிபடுகின்றனர். உள்ளூர் மாரியம்மன் திருவிழாக்கள் பொதுவெளியில் வீதி உலா வாக நடக்கும். ஆனால் நரிக்குறவர்களின் 'எருமைப் பலி' போன்ற முதன்மைச் சடங்குகள், இன்றும் உள்ளூர் மக்கள் பார்க்க முடியாதபடி தங்களின் குடியிருப்புகளின் எல்லைகளுக்குள் ரகசியமாகவே நடத்தப் படுகின்றன.

"இவர்கள் வணங்கும் தெய்வங்களையும் அவைகளின் வைப்பு முறையையும் ஊன்றிப் பார்த்தால் சப்தமாதர் வழிபாட்டுடன் மிகவும் தொடர்புடையதாக இருப்பதை அறியலாம். இந்துக்களுடைய கோவிலுக்கு நரிக்குறவர்கள் அபூர்வமாகச் சென்றாலும் தங்கள் தெய்வங் களைத் தங்கள் குடிசையிலேயே வைத்து வணஙடகுகிறார்கள். தெய்வ திருவுருவங்கள் ஒருதுணிமூட்டையில் வைக்கப்பட்டு, அதனை 'தராங்டு' என்று அழைக்கின்றனர்."[5]

திருவிழாக் காலங்களில் கடைப்பிடிக்கப்படும் கடுமையான விரத முறைகள்

குலதெய்வத் திருவிழாக்கள் என்பது வெறும் கொண்டாட்டங்கள் அல்ல. அவை தங்களின் ஆதித்தூய்மையையும் குலக்கட்டுப்பாட்டை யும் புதுப்பித்துக் கொள்ளும் மிக உன்னத மான ஆன்மிக நிகழ்வுகள் ஆகும். இத்திரு விழாக் காலங்களில் இச் சமூக மக்கள் கடைப்பிடிக்கும் கடுமையான விரதமுறைகள் பொதுச் சமூகத்தின் விரத முறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை.

"தொன்மைச் சமயத்தில் மந்திரம் ஒரு பிரிக்கவியலாத கூறாகும். இது அறிவியல் தோன்றுவதற்கு முந்திய கலையாகும். இதைக் கண்டறிந்து செயற்படுத்திய பெருமை தொன்மை மக்களையே சாரும். இயற்கைச் சூழலுடன் ஒன்றி வாழ்ந்த தொன்மை மக்கள் பல சமயங்களில் அவர்களின் ஆற்றல்களால் இயற்கையின் சீற்றங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ள இயலவில்லை. அத்தகைய சூழலில் அவர்களையும் அவர்களைச் சுற்றியுள்ள இயற்கையையும் மீறிய ஆற்றல் இருக்கிறது என நம்பி அவ்வாற்றலின் துணையுடன் இயற்கையின் முழுப் பலனைப் பெற முயற்சித்தனர். பின்னர் அவ்வாற்றலைக் கையகப் படுத்திக் கட்டுப்படுத்தும் அல்லது மேலாதிக்கம் செலுத்தும் வழிமுறையை மேற்கொண்டனர். கையகப்படுத்திய ஆற்றலை, சில சூத்திரங்கள் அல்லது வாய்பாடுகளாகச் சுருக்கி உச்சரிப்பதன் மூலம் அவ்வாற்றலைச் செயல்படுத்தம் நிலையை மேற்கொண்டனர்."[6]

பூசாரிகள் மற்றும் சாமியாடுவர்களின் கடுமையான விரதங்கள்

குலத் திருவிழாவை முன்னின்று நடத்தும் பூசாரிகளும், தெய்வத்தின் அருள்வாக்குச் சொல்வார்களும் திருவிழாவிற்குச் சில நாட்களுக்கு முன்பிருந்தே மிகக் கடுமையான விதிகளுக்கு உட்படுகின்றனர். திருவிழா தொடங்குவதற்கு 3 முதல் 9 நாட்கள் வரை பூசாரிகள் ஒரு வேளை மட்டுமே உணவு உண்பார்கள். சடங்கு நடக்கும் முக்கிய நாட்களில் நீர் கூட அருந்தாமல் முழு உபவாசம் இருப்பது வழக்கம். விரதக் காலங்களில் பூசாரிகள் பிற

மக்களிடமிருந்தோ அல்லது வெளி மனிதர் களிடமிருந்தோ விலகி, குலதெய்வத்தின் புனிதமான கூடாரம் அல்லது ஒதுக்குப் புறமான இயற்கைக் களங்களில் தங்கித் தியானிப்பார்கள். விரத நாட்களில் தங்களின் மனைவியை தொடக் கூடாது என்ற கடுமையான விதியும் உண்டு. பாய், படுக்கைகளைப் பயன்படுத்தாமல் வெறும் தரையில் மட்டுமே உறங்குவார்கள்.

குல மக்களின் கூட்டு விரத முறைகள்

நாடோடி வேட்டைச் சமூகமான நரிக்குறவ மக்களின் முதன்மை உணவே மாமிசம் தான் என்றாலும், குலதெய்வத் திருவிழாத் தொடங்குவதற்கு முன்பிருந்து சடங்குகள் முடியும் வரை குடியிருப்பில் எவரும் அசைவ உணவு சமைக்கவோ, உண்ணவோ கூடாது. குலதெய்வத்திற்குப் பலியிடப்பட்ட பிறகே அந்தப் பிராசாத்திற்குப் பலியிடப்பட்ட பிறகே அந்தப் பிராசாதத்தின் மூலம் விரதத்தை முடிப்பார்கள். விரத நாட்களில் குல மக்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளவோ, கெட்ட வார்த்தைகளைப் பேசவோ கூடாது. மீறினால் அது தெய்வக் குற்றம் ஆகி திருவிழாவின் வீரியத்தைக் கெடுத்து விடும் என்று நம்புகின்றனர்.

பெண்களுக்கான பிரத்யேக விரத விதிகளும் சமத்துவமும்

நரிக்குறவர் வழிபாட்டில் பெண்களின் சமத்துவ நிலை போற்றப்பட்டாலும், சடங்குத் தூய்மைக்காக பெண்கள் சிலவித உன்னத மான இயற்கை விதிகளுக்கு உட்படுகிறார் கள். திருழாக் காலங்களில் தங்களின் இயற்கைச் சுழற்சி (மாதவிலக்கு) நாட்களைக் கொண்ட பெண்கள் சடங்கு நடக்கும் எல்லைக்குள் வரக்கூடாது. இதனால் திருவிழா நாட்களைத் தீர்மானிக்கும் போது குடும்பத்து மூத்தபெண்களின் ஆலோசனையைக் கேட்டு அவர்களின் தூய்மை நாட்களுக்கு ஏதுவாகவே திருவிழாக் தேதிகள் குறிக்கப் படும். குடும்பத்தின் நன்மைய வேண்டியும், குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காகவும் சுமங்கலிப் பெண்கள் தனியாக விரதமிருந்து, பச்சரிசியை இடித்துத் தூய்மையான மாவிளங்கு மாவு தயாரிப்பார்கள்.

"பொங்கும் பானையில் தேவதை சக்தி கொண்டவன் தன் கையை விட்டு, அகப்பை யைப் போல் கிளறிக் கொடுக்கிறான். அதனால் அவன் கை இரணமாகி விடுவ தில்லை, பொங்கலுக்குப் பின் ஒரு எருமைக் கிடாவையோ, ஆட்டையோ தேவதைக்காக கத்தியால் குத்தி பீரிட்டு அடிக்கும் குருதியை, வாயால் பிடித்துக் குடித்து ஆடுவான். இக்காட்சிகளை புகைப்படம் பிடிக்க விட மாட்டார்கள்"[7]

முடிவுரை

தருமபுரி மாவட்டம் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் நரிக்குறவர் சமூக மக்களின் குலதெய்வ வழிபாட்டு முறைகளையும் அவற்றின் பின்னணிகளையும் பார்க்கும் போது இவர்ளின் ஆன்மிகம் என்பது வெறும் சடங்குகள் மட்டுமல்ல. அது அச்சமூகத்தின் ஒட்டுமொத்த வாழ்வியலையும் வரலாற்றையும் தாங்கிப் பிடிக்கும் ஒரு பண்பாட்டு அரண் என்பது தெளிவாகிறது. பிரபஞ்சத்தின் இயக்கச் சக்தியாகப் பெண்மையைப் போற்றும் இவர்களின் தத்துவம் நிஜ வாழ்விலும் பெண்களுக்கு பொருளாதாரச் சுதந்திரம் போன்ற உன்னத மான சமூகச் சமத்துவ நிலையைப் பெற்றுத் தந்துள்ளது. இவர்களின் உக்கிரமான் எருமைப் பலி சடங்குகளின் வன்முறை இல்லை. மாறாக இயற்கையிடம் இருந்து எதைப் பெற்றுக் கொண்டோமோ அதைத் திரும்பக் கொடுக்க வேண்டும் என்ற உயிர்ச் சுழற்சியும் பூமித் தாயைக் குளிரவைக்கும் நன்றியுணர்வுமே புதைந்துள்ளன. பலி கொடுக்கப்படும் உணவைக் குலமக்கள் அனை வரும் சமமாகப் பகிர்ந்துண்ணும் கூட்டு நுகர்வு சமூக ஒற்றுமையைக் காட்டுகிறது.

நரிக்குறவர் சமூகத்தின் குல தெய்வ வழிபாடு என்பது ஒரு நாடோடிப் பழங்குடிச் சமூகம் தங்களின் அசைக்க முடியாத நம்பிக்கைகள் கலைகள் மற்றும் மாந்திரீகத் தற்காப்புகள் ஆகியவற்றின் துணைக் கொண்டு எவ்வித எழுத்து வடிவங்களும் இன்றித் தங்களின் வரலாற்றையும் ஒழுக்கத் தையும் தலைமுறை தலைமுறையாகக் கடத்தி வந்துள்ள ஒரு வாய்மொழி பண் பாடாகும். இவர்களின் தனித்துவமாக ஆன்மிகத் தத்துவங்களை உணர்ந்து போற்றுவது விளிம்புநிலை மக்களின் பண் பாட்டு உரிமைகளையும் அவர்களின் ஆதி அடையாளங்களையும் எதிர்காலச் சந்ததியி னருக்குக் கொணடு சேர்க்கப் பெருந்துணை யாக நிற்கும்.

நாடோடி வாழ்விலிருந்து நிலையான வாழ்வுக்கு மாறியதால் வழிபாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

வழிபாட்டு கூறுகள்	ஆதி நாடோடி வாழ்வியல் முறை	தற்போதைய நிலையான வாழ்வியல் முறை
வழிபாட்டுத் தளம் - கோவில்	நிலையான கோவில்கள் கிடையாது. காடு, மரத்தடி, மலை மற்றும் தற்காலிகக் கூடாரங்களே வழிபாட்டு தளங்கள்	குடியிருப்புகளுக்குள் சிறிய அளவிலான நிரந்தரக் கற்கோவில்கள், செங்கல் கட்டுமானங்கள் அமைத்தல்
தெய்வ உருவங்கள்	சிலைகளோ, படங்களோ இல்லை. சூலாயுதம், நடுகற்கள், முக்கோணக் கற்கள் மற்றம் சாமி முட்டை மட்டுமே முதன்மை வடிவங்கள்.	மாரியம்மன், காளி, துர்க்கை போன்ற பிற சமூகத்தினர் வழிபடும் தெய்வச் சிலைகள் மற்றும் வர்ணப் படங்களின் பயன்பாடு.
சடங்குகளின் ரகசியம்	எருமைப் பலி போன்ற முதன்மைச் சடங்குகள் வெளி ஆட்கள் எவரும் பார்க்க முடியாத படி மிக ரகசியமாக நடக்கும்.	குடியிருப்புகளின் பொதுவெளியில் சடங்குகள் நடப்பதால் ரகசியத் தன்மை குறைந்து பிற சமூக மக்களும் வேடிக்கை பார்க்கும் சூழல் உருவாகியுள்ளது.
பலியிடும் முறை	காட்டில் வேட்டையாடிப் பெற்ற காட்டு விலங்குகள், பறவைகள், உடும்புகள் மற்றும் வளர்ப்பு ஆடு, மாடுகள் பலியிடப்பட்டன.	வேட்டை முழுமையாகத் தடைபட்டதால் சந்தைகளில் விலைக்கு வாங்கப்படும் ஆடு, கோழி மட்டுமே தற்போதைய பலிப் பொருட்கள்.
இசை மற்றும் பாடல்கள்	வாக்ரி போலி மொழியில் அமைந்த ஆதி வாய்மொழிப் பாடல்கள், உடுக்கை, தப்பட்டை போன்ற எளிய தோல் கருவிகளின் நேரடி இசை.	பக்திப் படங்களின் ஒலி நாடாக்கள், சினிமா பாணி பக்திப் பாடல்கள் மற்றும் நவீன ஒலிபெருக்கிகளின் பயன்பாடு.
திருவிழா கால அளவு	இடப் பெயர்வுக்கு ஏற்பவும், வேட்டைத் தேவைகளுக்கு ஏற்பவும் சில மணி நேரங்கள் அல்லது ஓரிரு நாட்களில் சடங்குகள் முடியும்.	பிற சமூகங்களைப் போலக் குறிப்பிட்ட நாட்களைக் குறித்து (ஆடி மாதம், தை மாதம்), பல நாட்கள் திட்டமிட்டுத் திருவிழா நடத்துதல்.
வழிபாட்டு ஆடம்பரம்	இயற்கையோடு இணைந்த எளிமான வழிபாட்டு முறைகள், ஆடம்பரப் பொருட்களுக்கோ, விளம்பரங்களுக்கோ இடமில்லை.	மின் விளக்கு அலங்காரங்கள், பந்தல்கள், நவீன ஆடைகள் மற்றும் திருவிழா அழைப்பிதழ்கள் அச்சிடும் வழக்கம்.
உள்ளூர் கலாச்சாரத் தாக்கம்	முற்றிலும் தனித்துவமான பழங்குடி ஆன்மிகக் கோட்பாடுகள் மற்றும் ஆதி சடங்கு முறைகள் மட்டுமே இருந்தன.	உள்ளூர் கிராமத் தெய்வ வழிபாட்டு முறைகள், இந்து சமயப் பெருந்தெய்வ வழிபாட்டுச் சடங்குகளின் தாக்கம்.

தகவலாளர் பட்டியல்

பெயர்	ஊர்	பாலினம்	தொழில்	சந்தித்த நாள்
தர்மன்	தருமபுரி	ஆண்	பூசாரி	14-12-2024
சேது	மொரப்பூர்	ஆண்	மணிவிற்றல்	28-12-2024
கிருஷ்ணன்	அதியமான் கோட்டை	ஆண்	அழகு பொருள் விற்பனையாளர்	27-03-2025
மாதையன்	அதியமான் கோட்டை	ஆண்	அழகு பொருள் விற்பனையாளர்	10-04-2025
சின்னப்பா	ஓகேணக்கல்	ஆண்	கோழி	15-04-2025
மல்லிகா	அரூர்	பெண்	விற்பனையாளர்	3-05-2025
பாக்கியம்	தீர்த்தமலை	பெண்	மணிவிற்றல்	11-05-2025
செல்வி	பென்னாகரம்	பெண்	மணிவிற்றல்	18-05-2025

அடிக்குறிப்பு

1. டாக்டர் சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 223
2. த. பழமலய், தருமபுரி மண்ணும் மக்களும், ப.67
3. நா. வானமாமலை, மக்களும் மரபுகளும், ப. 98
4. ச. அகத்தியலிங்கம், தமிழகப் பழங்குடி மக்கள், ப. 72
5. முனைவர் கோ. சீனிவாசவர்மா, நரிக்குறவர் பழங்குடி மக்கள், ப.40
6. பக்கவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.517
7. பிலோ இருதயநாத், யார் இந்த நாடோடிகள், ப.28

துணைநூற்பட்டியல்

1. ச. அகத்தியலிங்கம், தமிழகப் பழங்குடி மக்கள், முதற் பதிப்பு 1972, மொழியியல் துறை, அண்ணாமலை பல்கலைக்கழகம்.
2. டாக்டர் சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை – 600017.
3. த. பழமலய், தருமபுரி மண்ணும் மக்களும், பெருமிதம் வெளியீடு, 2005, விழுப்புரம், 6056602.
4. நா. வானமாமலை, மக்களும் மரபுகளும், பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட், 142, ஜானி ஜான் கான் ரோடு, சென்னை – 600014.
5. பக்கவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 608001.
6. முனைவர் கோ. சீனிவாசவர்மா, நரிக்குறவர் பழங்குடி மக்கள், சுடர்மணி பதிப்பகம், சென்னை – 600094.
7. பிலோ இருதயநாத், யார் இந்த நாடோடிகள்?, வானதி பதிப்பகம், சென்னை -17.